பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பல்லாவரம் தெற்கு பகுதி, பாகம் எண் – 203ல் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதிச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பெர்னாட் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.12.2025) மார்கழித் திருவிழாவை முன்னிட்டு, சென்னை, பூங்கா நகர், ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் திருவெம்பாவை பாராயணம் மற்றும் கூட்டு வழிபாட்டை தொடங்கி வைத்து சிறப்பித்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், சென்னை மண்டல இணை ஆணையர்கள் திருமதி ஜ.முல்லை, திரு சு. மோகனசுந்தரம், உதவி ஆணையர் க. சிவகுமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ.அசோக் குமார் முந்த்ரா மற்றும் அறங்காவலர்கள், செயல் அலுவலர் இரா. முத்துசாமி, மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ரூ.20.80 இலட்சம் செலவில் பூங்கா நகர்

ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் புதிய அன்னதானக் கூடம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை, டிச. 27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (26.12.2025) சென்னை, பூங்கா நகர், அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் ரூ.20.80 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடத்தை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மார்கழித் திருவிழாவை முன்னிட்டு, திருக்கோயில் வளாகத்தில் நடைபெற்ற திருவெம்பாவை கூட்டு வழிபாட்டை தொடங்கி வைத்து, பங்கேற்று சிறப்பித்தார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள பழமையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்கள் சார்பில் பல்வேறு விழாக்களை ஏற்பாடு செய்து நடத்துதல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் கந்த சஷ்டி பெருவிழாவின் போது முருகன் திருக்கோயில்களில் கந்த சஷ்டி பாராயணம், மார்கழி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களில் திருப்பாவை பாராயணம், சிவன் திருக்கோயில்களில் திருவெம்பாவை பாராயணம் மற்றும் கூட்டு வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை, பூங்கா நகர், தங்க சாலையில் அமைந்துள்ள அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (26.12.2025) ரூ.20.80 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடத்தை பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து, மார்கழித் திருவிழாவை முன்னிட்டு, திருக்கோயிலில் திருவெம்பாவை கூட்டு வழிபாட்டை தொடங்கி வைக்க, ஓதுவார்கள் மற்றும் இறையன்பர்கள் திருவெம்பாவை பாராயணம் செய்தனர். முன்னதாக, இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம் திருவெம்பாவை யின் சிறப்பு குறித்து விளக்கிக் கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில் சென்னை மண்டல இணை ஆணையர்கள் திருமதி ஜ. முல்லை, சு. மோகனசுந்தரம், உதவி ஆணையர் க. சிவகுமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ. அசோக் குமார் முந்த்ரா மற்றும் அறங்காவலர்கள், செயல் அலுவலர் இரா. முத்துசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் திட்டம்!

ஜன. 5 இல் முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 27-

கல்லூரி மாணவர்களுக்கான கட்டணமில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை வருகிற ஜனவரி 5 ஆம் தேதி அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் செயல்பட்டு வந்தது. இது கரோனா காரணத்தினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

இதன் பிறகு 2021ல் திமுக வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் அரசு கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி - கைக்கணினி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக 2025 - 2026 தமிழ்நாடு பட்ஜெட்டில் அறிவித்த நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, "முதற்கட்டமாக, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு, அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும்" எனத் தெரிவித்தார்.

இதனை நிறைவேற்றும் வகையில், முதற்கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகளை ஹெச்.பி., டெல், ஏசர் ஆகிய 3 நிறுவனங்களிடம் இருந்து தமிழ்நாடு அரசு கொள்முதல் செய்தது. மேலும், மாணவர்களுக்கு லேப்டாப் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில கடந்த 18 ஆம் தேதி அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "கல்லூரி மாணவர்கள் கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறை முடிந்து கல்லூரிக்கு வந்தவுடன் அவர்களுக்கு லேப்டாப் வழங்கப்படும்" எனத் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக அமெரிக்காவின் Perplexity AI நிறுவனத்தோடு எல்காட் நிறுவனம் ஒரு சிறப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. அதன்படி 6 மாத காலத்திற்கு Perplexity Pro AI வசதி கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில் வரும் ஜனவரி மாதம் 5ஆம் தேதி சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடக்கும் நிகழ்ச்சியில், 10 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

இதேபோல், அன்றைய தினம் மாவட்டங்களில் அமைச்சர்கள், மேயர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

திருவண்ணாமலை - திருக்கோவிலூர் சாலையில் "வேளாண் கண்காட்சி - கருத்தரங்கம்"!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 27-

திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைபள்ளி எதிரில் முதலமைச்சர் அவர்களால் டிசம்பர் 27, 2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு தினங்களில் நடைபெறும் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்-2025" விழாவில் உழவர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்றுப் பயன்பெற வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அழைப்பு வருமாறு:

தமிழ்நாட்டில் உழவர்களின் நலனை முன்னிறுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மைத்துறை, வேளாண்மை- உழவர் நலத்துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையும் அறிமுகப்படுத்தப்பட்டது. வேளாண்மை, சார்புத் துறைகளுக்கென கடந்த ஐந்து வேளாண்மை நிதிநிலை அறிக்கைகளில் ரூ.1,94,076 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண் வணிகத் திருவிழா!

இவற்றின் ஒரு பகுதியாக, உழவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் ஆண்டுதோறும் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், இந்த ஆண்டின் முதல் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்" தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 11.06.2025 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் விஜயமங்கலத்திலும், இரண்டாவதாக "வேளாண் வணிகத் திருவிழா" நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் 27.09.2025 அன்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றன. உழவர் பெருமக்கள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் திரளாகப் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டின் மூன்றாவது நிகழ்வாக வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், உயர்விளைச்சல் தரவல்ல புதிய பயிர் இரகங்கள், பாரம்பரிய இரகங்கள், அறுவடை பின்சார் மேலாண்மை நுட்பங்கள், மதிப்புக்கூட்டும் நுட்பங்கள், வேளாண்மையில் மின்னணு தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்தும் நுட்பங்கள், உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு நுட்பங்கள், பயிர்க்கடன், பயிர்க்காப்பீடு உள்ளிட்ட சேவைகள், ஏற்றுமதி தொடர்பான விழிப்புணர்வு போன்ற பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து விவரங்களையும் உழவர்கள், மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள் இயற்கை நல ஆர்வலர்களிடையே கொண்டுசேர்த்திடும் வகையில் வரும் 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு தினங்களில் திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு - 2025" விழாவினை மிகச்சிறப்பாக நடத்த தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்துவருகிறது.

முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.12.2025) தொடங்கி வைத்து, 80,571 உழவர்களுக்கு ரூ.669 கோடி மதிப்பிலான திட்டப்பலன்களை வழங்கிச் சிறப்பிக்க உள்ளார்கள்.

வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற அரசுத் துறைகள் தங்கள் செயல்பாடுகள், திட்டங்களைக் காட்சிப்படுத்த உள்ளார்கள், நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், விதை ஆகியவற்றின் உற்பத்தியாளர்கள், வங்கிகள், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேளாண் உற்பத்திக்குத் தேவையான புதிய இரகங்களின் விதைகள், காய்கறி விதைகள், பழ வகைகளில் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்ட உரக்கலவை, உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் உள்ளார்கள்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவங்கள், பாரம்பரிய உணவு உற்பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள் உணவு பதப்படுத்தும் அமைப்புகளும் பங்கேற்கின்றன.

இதற்கென 250க்கும் மேற்பட்ட உள் மற்றும் வெளிப்புறக் காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

நெல் சாகுபடித் தொழில் நுட்பங்கள், கரும்பில் பூச்சி, நோய் மேலாண்மைக்கான நவீன தொழில்நுட்பங்கள், இயற்கை மற்றும் உயிர்ம வேளாண்மை தொழில்நுட்பங்கள், வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்களின் இன்றைய நிலையும் எதிர்காலத் தேவைகளும், பயறு வகைப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகள், காய்கறி உற்பத்திக்கான உயர் தொழில்நுட்பங்கள், மலர்கள் சாகுபடிக்கான உத்திகள், எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான உயர் விளைச்சல் தொழில்நுட்பங்கள், பண்ணை வருமானத்தை உயர்த்துவதற்கு ஏற்ற உப தொழில்கள், உயர் வருமானம் பெற மண்டலத்திற்கேற்ற வேளாண் காடுகள், சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய இரகங்களின் மருத்துவ குணங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் பொருட்களின் விநியோகத் தொடர் மேலாண்மை, வேளாண்மையில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் விவசாயிகள் தங்களின் அனுபவத்தின் மூலம் வகுத்துள்ள தீர்வுகள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும். இக்கருத்தரங்குகளில் தொழில்நுட்ப வல்லுநர்களும், அனுபவமிக்க வேளாண் பெருமக்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார்கள்.

வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பெருவாரியான வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் உழவர்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 27.12.2025 அன்று துவக்கி வைக்கப்பட உள்ள வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் உழவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டு பயன்பெறக் கேட்டுக்கொள்கிறேன் என்று வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் திட்டமிட்டு மதக் கலவரத்தை உருவாக்க நினைக்கின்ற

மதவாத சக்திகள் - காவி கும்பலின் அராஜகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

நமது திராவிட இயக்கத் தலைவர் திருமதி. ஓவியம் அறிவிப்பு!

சென்னை, டிச.27-

நமது திராவிட இயக்கத் தலைவர் திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் அமைதியை சீர்குலைக்கும் நோக்கில் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி இயக்கங்கள் மதக்கலவரத்தைத் தூண்டி தமிழ்நாட்டில் சட்ட ஒழுங்கு சீர்குலைவை ஏற்படுத்தும் வகையில் மதுரை திருப்பரங்குன்ற மலையில் முருகன் பெயரைச் சொல்லி தீபம் ஏற்ற முயன்று பிற மதங்கள் இடையே மதக்

கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தி.மு.க.வுக்கு அவப்பெயர் ஏற்படுத்த நினைக்கும் பா.ஜ.க.வின் திட்டம் ஒருநாளும் இங்கு எடுபடாது.

தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இங்கு ஒற்றுமையாகத்தான் வாழ்கிறார்கள். வட மாநிலத்தில் செய்வதுபோல் தமிழ்நாட்டிலும் செய்து கொள்ளலாம் என்று திட்டம் தீட்டும் பா.ஜ.க.வை தோற்கடிப்போம்.

அது மட்டுமல்ல; தமிழ்நாட்டில் அனைத்து மக்களும் மத நல்லிணக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

திட்டமிட்டு பா.ஜ.க. அரசு மதக் கலவரத்தை உருவாக்க நினைக்கின்ற மதவாத சக்திகளை மற்றும் காவி கும்பலின் அராஜகத்தை கண்டித்து மாபெரும்கண்டனஆர்ப்பாட்டம் இன்று (27.12.2025-சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில் எக்மோர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் நடைபெறுகிறது.

மதவெறியில் பொதுசொத்தை சேதப்படுத்தும் மதவாத ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி கும்பலை இந்தப் போராட்டத்தின் மூலம் திராவிட இயக்கத்தின் சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பி.கே.குமார் தலைமை! கே.கண்ணன் எம்.சி. முன்னிலை!

கலைஞர் நகர் தெற்கு பகுதி - 137 வது வட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம்!

ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ – வே.உமாகாந்த் – ஆர்.சசிகுமார் சிறப்புரை!

சென்னை, டிச.27 -

கலைஞர் நகர் தெற்கு பகுதி, 137 வது வட்டக் கழகச் செயலாளர் பி.கே. குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி, 137 வது வட்டத்தில் 198 மற்றும் 202 ஆகிய இரண்டு பாகங்களின் என் வாக்கு சாவடி வெற்றி வாக்குச் சாவடி கூட்டம் இன்று (27.12.2015 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, காணு நகர் புற்று கோவில் அருகில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு கலைஞர் நகர் தெற்குப் பகுதி, 137 வது வட்டக் கழகச் செயலாளர் பி.கே.குமார் தலைமை வகிக்கிறார்.

கலைஞர் நகர் தெற்கு பகுதிச் செயலாளர் கே. கண்ணன் எம்.சி. முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தொகுதிப் பார்வையாளர் வி. உமாகாந்த், சென்னை தெற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஆர்.சசிகுமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

ஆகவே 137 வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 137 வது வட்டக் கழகச் செயலாளர் பி.கே.குமார் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 52 ஆவது நினைவுதினத்தையொட்டி பாப்பிரெட்டிபட்டியில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.உடன் ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன், இராசு.தமிழ்ச்செல்வன், ஆசிரியர்.ராமகிருஷ்ணன், உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பரப்புரை புதுவாயல் ஊராட்சி பாகம் எண்: 182, 183 பகுதியில் மாவட்டச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் ஆலோசனைப்படி நடைபெற்றது. இதில் ஒன்றிய கழக செயலாளர் கும்முடிப்பூண்டி கி வேணு ஆனந்த் பரப்புரை மேற்கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி துண்டு பிரச்சாரம் வழங்கினார் உடன் நிர்வாகிகள் மங்கலம் சுரேஷ், துர்கா வெங்கடேசன் ஏ.பிரபு, ஜோதி, கிளை செயலாளர்கள் நிர்வாகிகள், BLA2, BDA, BLC, உள்பட பலர் உள்ளனர்.